வேலூர் மாவட்டம்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1137/அ1/ஒ.ப.க./2023, நாள்.25.07.2023

.....

பொருள் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 10 மற்றும் 12ம் வகுப்பு துணைத் தேர்வெழுதிய மாணவர்களுக்கு, பள்ளிகளில் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல் – உயர்கல்வி / ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் விண்ணப்பிக்க வழிகாட்டுதல்கள் – வழங்குதல் – சார்பு

பார்வை சென்னை – 6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.98/L1/CG/24/MS/2023, நாள். 24.07.2023

.....

நான் முதல்வன் திட்டம், அரசு பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் கடந்த ஜுன் / ஜுலை 2023-ல் துணை தேர்வு எழுதியுள்ளார்கள். தேர்வெழுதிய மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் துணைத் தேர்வு எழுதிய மாணவர்கள் உயர்கல்விக்கு செல்வதற்கு ஏதுவாக ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேரவும், பிற உயர்கல்வி வாய்ப்புகள் பெற 28.07.2023 அன்று காட்பாடி, காந்திநகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வளாகத்தில் நடைபெறவுள்ள முகாமில் மேற்காண் மாணவர்கள் பங்கு பெற ஏதுவாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், DIET பேராசியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் பார்வையில் காணும் சென்னை – 6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்பட பார்வையில் காணும் செயல்முறைகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் துணை தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களை உயர்கல்வி பெற பொறுப்பான ஒரு ஆசிரியருடன் முகாமில் கலந்துக்கொள்ள ஏற்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் செயல்முறைகள்

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர்.

பெறுநர் –

1. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள். (உரிய வழியாக)
2. அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

நகல் –

1. முதன்மைக் கல்வி அலுவலர் வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர் (பொ), DIET, இராணிப்பேட்டை (உரிய நடவடிக்கையின் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர்.

தலைமையாசிரியர்களுக்கான பொறுப்புகள்

- அனைத்து அரசு பள்ளித் தலைமையாசிரியர்களும் துணைத் தேர்வு எழுதிய மாணவர்களை தவறாமல் பள்ளிகளுக்கு வந்து மதிப்பெண் சான்றிதழ் பெற செய்தல் வேண்டும். அம்மாணவர்களின் உயர்கல்வி விருப்பம் அறிந்து ஐடிஐ பாலிடெக்னிக் சேர விரும்பும் மாணவர்களை சார்ந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்திற்கு சென்று சேர்க்கை முகாமில் கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.
- துணைத் தேர்வெழுதிய அனைத்து மாணவர்களும் இம்முகாமில் தவறாது பங்கேற்க ஏதுவாக அம்மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களை அந்தந்த பள்ளிகளில் மாணவர்கள் பெற்றபின் உடனடியாக தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரால் அனுமதிக்கப் பட்ட ஆசிரியர் ஒருவருடனும் மற்றும் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் உதவியுடனும் மாணவர்களை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்துக்கு அழைத்து வந்து ஐடிஐ / பாலிடெக்னிக் சேர்க்கை முகாமில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்திட வேண்டும் . அவ்வாறு அழைத்து வரும் ஆசிரியர்களுக்கு சிறப்பு OD வழங்கிடல் வேண்டும்.

- துணைத் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்று அவர்கள் உயர்கல்விக்கு/ ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளுக்கு விண்ணப்பித்து விட்டார்களா என்பதனை உறுதி செய்து School Login படிவத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.